# இருளுக்கு ஒளி

# Light to the Dark

இருள் - 1 பிப்ரவரி 2013 ஒளி - 2

## இச்சியாதே


1. பிறன் மனைவியை பக்கம் 3

2. பிறன் நிலத்தை பக்கம் 10



**Rev. Dr. A. பிரகாசம்**

B.Sc., M.A., M.Ed., D.D.

4, லேபர் கிணறு 3-வது தெரு,

ஆதம்பாக்கம்,

சென்னை - 600 088.

செல் : 98412 98464


இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும், அவைகளின்படி நடக்கவும், அவைகளுக்குச் செவி கொடுத்து வந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய். (உபாகமம் 28:14)

*Not for sale*
*Free will offering accepted to publish the next issue*

**விற்பனைக்கல்ல**

**மன உற்சாக காணிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.**

**அடுத்த மாதம் வெளியிடுவதற்காக**



# பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக

**தே**வன் கொடுத்த பத்தாவது கட்டளையில் ஒருபகுதி (யாத் 20:17, உபா 5:21)


### தாவீது செய்த பாவம் – 2சாமு 11:1–27

ராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்படுங் காலம் வந்தபோது, தாவீது ராஜா புறப்பட்டுச் செல்லவில்லை. சேனாபதி யோவாபையும், சேவகரையும், அம்மோன் புத்திரரரை அழிக்கவும், ரப்பா பட்டணத்தை முற்றிகை போடவும் அனுப்பினான்.

ஒரு நாள் சாயங்காலத்தில் தாவீது, தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனையின் மேல் மாடியில் நடந்துகொண்டிருக்கும்போது, குளித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணைக் கண்டான்.

*(பெண்களுக்கு அறிவுரை : எல்லாப் பக்கமும் மூடப்பட்ட அறையில், துணி இல்லாமல் குளிப்பதால் கேடு இல்லை. சரியாக மூடப்படாத அறையில், துணி இல்லாமல் குளிக்கக் கூடாது. தோலுரித்து தொங்க விடப்பட்டுள்ள ஆடு போல, ஒரு பெண்ணைப் பார்க்கும் ஆணின் மனம் தூண்டப்படும். சாத்தான், மாமிச இச்சையை, கண்ணின் இச்சையைத் தூண்டி விடுவான். பாவம் செய்வான், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று (மத் 5:28). அவன் பாவஞ்செய்ய நீ தூண்டாதே, ஆண்களுக்கு அறிவரை : குளிக்கும் பெண்ணைப் பாராதே. உடலால் பாவஞ் செய்யாவிட்டாலும், உள்ளத்தால் பாவஞ்செய்து விடுவாய்).*

தாவீது, அந்தப் பெண்ணை விசாரிக்க ஆள் அனுப்பினான். உரியாவின் மனைவி பத்சேபாள் என்றறிந்தான். ஆளை அனுப்பி, அவளை அழைத்து வரச் சொன்னான். அவள் வந்த போது, அவளோடு சயனித்தான். (ஆதி 39:9ல் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவஞ் செய்வது எப்படி என்று ஓடிப் போனது போல ஓடியிருக்க வேண்டும்).



பத்சேபாள், தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு ஆள் அனுப்பினாள். லேவி 18:20 பிறனுடைய மனைவியோடே சயனித்து, அவளால் உன்னை தீட்டுப்படுத்திக் கொள்ளவேண்டாம். பெண்ணாசையில் தன்னை இழந்தார் தாவீது. எசே 18:6 அயலான் மனைவியை தீட்டுப்படுத்தாதே. நீதி 6:27-29 தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக் கொள்ளக் கூடுமோ? தன் கால் சுடாமல், எவனாவது தழலின் மேல் நடக்கக் கூடுமோ? பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அவளைத் தொடுகிறவனும் ஆக்கினைக்குத் தப்பான்.

பத்சேபாளின் கணவன் ரப்பாவில் இருக்கிறான். அவள் கர்ப்பமானது தெரிந்தால் லேவி 20:10-ன்படி (உபா 22:22) ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், அந்த விபசாரனும், அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள். தாவீதையும், பத்சேபாளையும் கொலை செய்ய வேண்டும். பாவத்தை மூட நினைத்தார். அக்கிரமத்தை மறைக்க நினைத்தார். மீறுதல் அடக்கி வைக்க நினைத்தார்.

தாவீது, யோவாபுக்கு ஆள் அனுப்பி, உரியாவை அனுப்பு என்றான். யோவாபு, உரியாவை அனுப்பினான். தாவீது, யோவாப், போர் வீரர்கள், யுத்தத்தின் செய்தியை விசாரித்தபின், வீட்டிற்குப் போகச் சொன்னான். ராஜாவிடமிருந்து அருமையான பொருட்கள் உரியாவின் வீட்டிற்கு அனுப்பப்பட்டது.

உரியா தன் வீட்டிற்குப் போகவில்லை. ராஜ அரமனையில் இருக்கும் சேவகரோடு படுத்துக் கொண்டான். இரவு உரியா தன் வீட்டுக்குப் போகவில்லை என்று தாவீதுக்கு மறுநாள் அறிவிக்கப்பட்டது. தாவீது, உரியாவிடம் வீட்டிற்குப் போகாததன் காரணத்தைக் கேட்டார். உரியா தாவீதிடம், பெட்டியும், இஸ்ரவேலும், யூதாவும் கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். யோவாப், சேவகர்கள் வெளியிலே பாளையமிறங்கியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, புசிக்கிறதுக்கும், குடிக்கிறதற்கும், மனைவியோடே சயனிக்கிறதற்கும், வீட்டுக்குப் போவேனோ? நான் அப்படி செய்யமாட்டேன் என்று தாவீதின் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன் என்றான்.

தாவீது உரியாவை மறுநாள் அனுப்பி விடுவதாகச் சொன்னான். அன்று இரவு உரியாவை புசித்து, குடிக்க வைத்து, வெறிக்கப்பண்ணினான். உரியா அவன் வீட்டிற்கு போகவில்லை. அரமனையிலே சேவகரோடு படுத்துக் கொண்டான்.

தாவீது, யோவாபுக்கு ஒரு நிருபத்தை எழுதினான். அதை உரியாவின் கையிலே கொடுத்தனுப்பினான். மும்முரமாய் போர் நடக்கிற இடத்திலே உரியாவை நிறுத்தி, வெட்டுண்டு சாகும்படி, அவனை விட்டுப் பின் வாங்குங்கள் என்று எழுதியிருந்தான். தன்னைக் கொலை செய்ய போகிறார்கள் என்று

அறியாமல், அந்த செய்தியைக் கொண்டு சென்றான் உரியா. தன் சுய நலத்திற்காக 30 பராக்கிரம சாலிகளில் ஒருவனான உரியாவை (2சாமு 23:39, 1நாளா 11:41) மறைமுகமாக கொலை செய்ய நினைத்தான் தாவீது. யோவாப் அதை செய்து முடித்தான். ஒருவனை தாவீதிடம் அனுப்பினான். ராஜா கோபப்பட்டு, பட்டணத்தாருக்குக் கிட்டபோல், யுத்தம்பண்ண வேண்டியது என்ன? எருப்பேசேத்தின் குமாரன் அபிமெலேக்கைக் கொன்றது யார்? தேபேசிலே ஒரு பெண் அலங்கத்திலிருந்து ஏந்திரக்கல்லை அவன் மேல் போட்டதினால் அல்லவோ (நியாயா 9:52,53) என்று கேட்டால், உரியாவும் செத்தான் என்று சொல்லச் சொன்னான்.

பத்சேபாள், தன் நாயகன் உரியாவுக்காக இழவு கொண்டாடினாள். துக்க நாள் சென்ற பின்பு, அவளை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். அவள் குமாரனைப் பெற்றாள். யாருக்கும் தெரியாமல் மறைத்துவிட்டோம் என்று தாவீது நினைத்திருக்கலாம். ஆனால், கர்த்தரின் பார்வையில் அது பொல்லாதது. 2நாளா 16:9 கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.

யோபு 34:22 அக்கிரமக்காரர் ஒளித்துக் கொள்ளத்தக்க அந்தகாரமு மில்லை. மரண இருளுமில்லை என்பதை மறந்தார்.

## பாவம் உணர்த்தப்பட்டது (2சாமு 12:1-9)



கர்த்தர், நாத்தான் தீர்க்கதரிசியை அனுப்பினார். நாத்தான் தாவீதிடம், ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள். ஒருவன் ஐசுவரி யவான், மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடுமாடு கள் வெகு திரளாயிருந்தது. தரித்திரனிடம் ஒரு சின்ன ஆட்டுக் குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது. ஐசுவரியவானிடம் வழிப்போக்கன் ஒருவன் வந்தான். தரித்திரனுடைய ஆட்டுக் குட்டியைப் பிடித்து, சமையல் செய்தான்.

தாவீது, அந்த மனுஷன்மேல் கோபமாகி, நாத்தானிடம் இந்த காரியத்தைச் செய்தவன் மரணத்திற்குப் பாத்திரன். அவன் இரக்கமற்ற வனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியால், அந்த ஆட்டுக் குட்டிக்காக நாலத்தனை திரும்ப செலுத்த வேண்டும் என்றான். யாத் 22:1 ஒருவன் ஆட்டைத் திருடி, அதைக் கொன்றால், அந்த ஆட்டுக்கு நாலு ஆடுகளை பதிலாக கொடுக்கக்கடவன். சகேயு: நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டா னால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் (லூக் 19:8).

நாத்தான் தாவீதிடம், நீயே அந்த மனுஷன். உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன். உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்தேன். உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்தேன். இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்கு கையளித்தேன். இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன்.

கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்த காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை பட்டயத்தால் மடிவித்தாய். அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டாய். அம்மோன் புத்திரரின் பட்டயத்தால் கொன்று போட்டாய்.

## தண்டனை 1 – 2சாமு 12:10 :
## பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும்.

**தண்டனை 1 நிறைவேறுதல்**

**1) தாவீது – யெஸ்ரயேல் ஊராளான அகினோவான் மகன் அம்னோன் (2சாமு 3:2) முதல் பிறந்தவன்.**

தாவீது - மாக்காள் பெற்ற அப்சலோம் (2சாமு 3:3) 3-வது மகன். அப்சலோமுக்கு தாமார் என்ற சகோதரி இருந்தாள். அம்னோன் அவள் மீது மோகங்கொண்டான். நாடகமாடி அவளைக் கற்பழித்தான். வீட்டை விட்டுத் துரத்தினான் (2சாமு 13:1-19).

தன் தகப்பனது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் (உபா 27:22). அப்சலோம், அம்னோனைப் பகைத்தான். தந்திரமாக அம்னோனைக் கொன்றான் (2சாமு 13:22-29). அம்னோன் தாமாருக்குச் செய்த கொடுமையை நினைத்து தாவீது பற்றி எரிந்தான் (2சாமு 13:21). ராஜாவும் அவனுடைய எல்லா ஊழியக்காரரும் மிகவும் புலம்பி அழுதார்கள் (2சாமு 13:36).

**2. அப்சலோம் தாவீதுக்கு எதிராக புரட்சி செய்தான்**



(2சாமு 15:1-13) தாவீதைக் கொல்ல ஆலோசனை பண்ணினர். எப்பிராயீம் காட்டிலே யுத்தம் நடந்தது. தாவீதின் சேவகர் வென்றனர். அப்சலோம் கோவேறு கழுதையின் மேல் ஏறி செல்லும்போது கர்வாலி மரத்தின் கீழ் வந்தபோது, அவன் தலை, மரத்தில் மாட்டிக் கொண்டது.

கோவேறு கழுதை அப்பாலே போயிற்று. யோவாப் 3 வல்லயங்களை எடுத்து அவன் நெஞ்சிலே குத்தினான் (2சாமு 18:6-15). அப்சலோம் செத்தான்.

**3. தாவீது - ஆகீத் பெற்ற அதோனியா, நாலாம் குமாரன்**

(2சாமு 3:4) அதோனியா ராஜாவாக முயற்சித்தான். (1ராஜா 1:5-10) தாவீதால், சாலொமோன் ராஜாவாக்கப்பட்டான். (1:32-40) அதோனியா பலிபீடத்தின் கொம்புகளை பிடித்தான். சாலொமோன் மன்னித்து விட்டான் (1:50-53). அதோனியா, பத்சேபாளிடம் அபிஷாகை மனைவியாகக் கேட்டான். பத்சேபாள் சாலொமோனிடம் சொன்னாள். சாலொமோன் அதோனியாவைக் கொன்றான் (1இராஜா 2:13-25).

## தண்டனை 2 - 2சாமு 12:11
## உன் வீட்டிலே, பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணுவேன்.

**தண்டனை 2 நிறைவேறுதல்**

அப்சலோம் தாவீதுக்கு எதிராக புரட்சி செய்தான். அப்போது, தாவீது நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி நகரத்தை பட்டயக் கருக்கினால் சங்காரம் பண்ணாதபடி தீவிரமாய் புறப்படுங்கள். ராஜாவும் அவன் வீட்டாரும் கால் நடையாய் புறப்பட்டனர். தாவீது தன் முகத்தை மூடி வெறுங்காலால் நடந்து, அழுதுகொண்டு, ஒலிவமலைமேல் ஏறிப்போனான் (2இராஜா 15:14,16,30).

சீமேயி தாவீதை தூஷித்தான். தாவீது, அவன் ஊழியக்காரர்மேல் கல்லெறிந்தான். இரத்தப் பிரியனே, பேலியாளின் மகனே, தொலைந்து போ என்றான். சவுலின் இடத்தில் ராஜாவான உன் மேல், கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப்பழியைத் திரும்பப் பண்ணினார். "உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய். நீ இரத்தப் பிரியனான மனுஷன்" (2சாமு 16:5-14).

## தண்டனை 3 - 2சாமு 12:11
## உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்

**தண்டனை 3 நிறைவேறுதல்**

அப்சலோம், அகித்தோப்பேலிடம் ஆலோசனை கேட்டான். துன்மார்க்க ஆலோசனை சொன்னான். உம் தகப்பனின் மறுமனையாட்டிகளிடம் பிரவேசியும். உம் தகப்பனுக்கு நாற்றமாய் போனீர் என்று இஸ்ரவேலர் உம்மிடம் வருவார். அப்சலோம், மாடியில் கூடாரம்போட்டு, சகல இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடம் பிரவேசித்தான் (2சாமு 16:20-23). தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் (உபா 27:20).

லேவி 18:8 உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது. அது உன் தகப்பனுடைய நிர்வாணம் உபா 22:30 ஒருவனும் தன்

தகப்பனுடைய மனைவியைச் சேரலாகாது. தன் தகப்பன் மானத்தை அவன் வெளிப்படுத்தலாகாது.

## தண்டனை 4 – 2சாமு 12:14
## உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாக சாகும்.

### தண்டனை 4 நிறைவேறுதல்

கர்த்தர் தாவீது-பத்சேபாள் பெற்ற குழந்தையை அடித்தார். வியாதிப்பட்டது. தாவீது பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, இரா முழுவதும் தரையிலே கிடந்தான். மூப்பர்கள் சொல்லியும் கேட்கவில்லை. அப்பம் சாப்பிடவில்லை. ஏழாம் நாளில், பிள்ளை செத்துப்போயிற்று (2சாமு 12:15-18).

இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே, சிறிது நேரம் இன்பம் அனுபவித்துவிட்டு, இவ்வளவு கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டுமா? யோசியுங்கள். உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு (நீதி 5:18).

உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே. அவர் ஒருவனையல்லவா படைத்தார். ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தி உள்ள சந்ததியைப் பெறும்படி தானே. ஆகையால், ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக் கையாயிருங்கள். தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் (மல் 2:14-16).

## தாவீது மனம் வருந்துதல்

தாவீது, நாத்தானிடம் : நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் (2சாமு 12:13). மனம் வருந்தி மனந்திருந்தி, பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட்ட பின் பாடிய சங்கீதங்கள் 32ம், 51ம்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி 28:13).

நாத்தான் தாவீதிடம் : நீ சாகாதபடிக்கு (ஆத்தும மரணம்) கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார் (2சாமு 12:13).

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, ஒரு முறை பாவத்தில் விழுந்தபின் மனது கடினப்பட்டுப் போகாமல், மனம் வருந்து. தொடர்ந்து பாவ உளையில் விழுந்து, மனசாட்சி கெட்டுப்போக வேண்டாம்.



ஒரு பெரிய ஊழியக்காரி, தனது உதவியாளனுடன் விபசாரஞ்செய்து, வல்லமை இழந்தாள். ஒரு பெரிய ஊழியக்காரன், தனது பெண் உதவியாளுடன் பாவஞ்செய்து வரங்களை இழந்தான். பெண் ஊழியக்காரி பெண் உதவியாளரையும், ஆண் ஊழியக்காரன் ஆண் ஊழியக்காரனையும் வைத்திருந்தால், வல்லமையையும் வரங்களையும் இழந்திருக்கமாட்டார்கள். எழுந்து பிரகாசித்திருப்பார்கள்.

மனந்திருந்திய ஊழியக்காரியும், ஊழியக்காரனும் அதன்பின் முன்போல பிரகாசிக்கவில்லை. ஆண் நெருப்பு, பெண் பஞ்சு. எரியும் நெருப்பினருகே பஞ்சு சென்றாலும், பஞ்சு இருக்கிற இடத்திலே எரியும் நெருப்பு வந்தாலும், பஞ்சு தான் எரியும். பெண் தான் கர்ப்பவதியாகி, பத்சேபாளைப் போல, அவமானத்தை சுமக்க நேரிடும். அவமானத்தை மறைக்க, கருவைக் கலைத்தல் என்ற இன்னொரு பாவத்தை செய்ய நேரிடும். கண் இச்சை, மாமிச இச்சையிலிருந்து விலகி, பரிசுத்தமாய் வாழ கர்த்தர் உதவுவாராக.



# பிறனுடைய நிலத்தை இச்சியாதிருப்பாயாக

தேவன் கொடுத்த இந்தக் கட்டளை உபா 5:21-ல் மட்டும் உள்ளது. உபா 19:14 முன்னோர்கள் குறித்திருக்கிற எல்லையை ஒற்றிப்போடாயாக. எல்லைக் கல்லை மாற்றி வைத்து பிறனுடைய நிலத்தை தன் நிலத்தோடே சேர்த்துக் கொள்ளுபவர்கள் சிலர். இரண்டு வயல்களுக்கு இடையே செல்லும் ரோட்டை, இருபக்கமும் வெட்டி தங்கள் வயலோடே சேர்த்துக் கொள்பவர்கள் சிலர். அகலமான ரோடு ஒற்றையடிப் பாதையாகிறது. முழு நிலத்தையும் எடுத்துக் கொள்பவர்கள் சிலர். அப்படி எடுத்துக் கொள்ள நினைப்பவர்களும் இதை வாசித்து மனம் திருந்துவார்களாக.

## ஆகாப் செய்த பாவம் (1இராஜா 21:1-4)



சமாரியர் தேசத்திலே யெஸ்ரயேல் என்ற பட்டணம் இருந்தது. அதிலே ஆகாப் ராஜாவின் அரமனை இருந்தது. அரமனை அருகில், நாபோத் என்பவருக்கு திராட்சத் தோட்டம் இருந்தது.

ஆகாப் நாபோத்தோடே பேசினான். உன் திராட்சத் தோட்டம், என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால் அதை கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு. அதைப் பார்க்கிலும், நல்ல திராட்சத் தோட்டத்தை, அதற்குப் பதிலாகத் தருவேன் அல்லது உனக்கு வேண்டுமானால், அதின் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன்.

நாபோத் ஆகாபிடம், நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை, உமக்குக் கொடுக்காதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக. எண்.36:7 இஸ்ரவேல் புத்திரர், அவரவர், தங்கள் தங்கள் சுதந்தரத்தின் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்க வேண்டும். எனவே, நாபோத் சொன்னது சரி.

ஆகாப், ஒரு சாதாரண குடிமகன், ராஜா கேட்டதைக் கொடுக்கவில்லை என்று நினைத்திருக்கலாம். சலிப்பும், சினமுமாய் வீட்டுக்கு வந்தான். போஜனம் பண்ணிவில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டபின்.

# யேசபேல் செய்த பாவம் (1இராஜா 21:5-15)

ஆகாப் ராஜாவின் மனைவி யோசபேல், அவனிடம் வந்தாள். போஜனம் பண்ணாதபடிக்கு உம்முடைய மனம் கசப்பாயிருக்கிறது என்ன என்று கேட்டாள். ஆகாப் நடந்ததைச் சொன்னான். யேசபேல் ஆகாபிடம், நீர் எழுந்து போஜனம் பண்ணும் மனமகிழ்ச்சியாயிரும். யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை உமக்குக்கொடுப்பேன் என்றாள்.

ஆகாபின் பெயரால் அவள் நிருபங்களை எழுதினாள். அவன் முத்திரையை அதில் போட்டாள். அந்த நிருபங்களை யெஸ்ரயேலின் மூப்பருக்கும், பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள். அந்த நிருபங்களில் அவள் எழுதியது. உபவாசம் என்று பிரசித்தப்படுத்துங்கள். நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்துங்கள். தேவனையும், ராஜாவையும் தூஷித்தான் என்று பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை நிறுத்துங்கள். அவனுக்கு எதிராக சாட்சி சொல்லட்டும். அவனைக் கொண்டுபோய், அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள்.

பட்டணத்திலே குடியிருக்கிற மூப்பரும், பெரியோரும் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தினர்.

உபா 19:15 எந்த அக்கிரமத்தையாவது, பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயத்தீர்க்கக் கூடாது. இரண்டு, மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்பட வேண்டும். பேலியாளின் மக்களாகிய இரண்டு பேர் வந்து, அவனுக்கு எதிராக உட்கார்ந்து, நாபோத், தேவனையும், ராஜாவையும் தூஷித்தான் என்று சாட்சி சொன்னனர். நாபோத்தை பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய், அவன் சாகும்வரை கல்லெறிந்து கொன்றனர். அதே போல ஸ்தேவானுக்கும் செய்தனர். (அப் 6:11) இன்றும் செய்கிறோம். யாத் 22:28 நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், ஜனத்தின் அதிபதியை சபியாமலும் இரு.



லேவி 24:16 கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும்.

நாபோத் கல்லெறியுண்டு செத்ததை யேசபேல் கேள்விப்பட்டாள். ஆகாபிடம், நாபோத் உமக்கு விலைக்கிரயமாக கொடுக்கமாட்டேன் என்று சொன்ன திராட்சத் தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக் கொள்ளும். நாபோத் செத்துப்போனான் என்றாள். அந்த திராட்சத்தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக் கொள்ள புறப்பட்டான்.

## பாவம் உணர்த்தப்பட்டது (1இராஜா 21:17–20,25)

1இராஜா 8:40 தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயங்களை அறிந்தவராதலால், அவனவனுடைய வழிகளுக்குத் தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக.

கர்த்தருடைய வார்த்தை எலியா தீர்க்கத்தரிசிக்கு உண்டாயிற்று. சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ. நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை சொந்தமாய் எடுத்துக்கெள்ள போயிருக்கிறான் அவனைப்பார்த்து, நீ கொலைசெய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையா?

கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப் போட்டாய். தன் மனைவியாகிய யேசபேல் தூண்டி விட்டபடியே, கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தாய் என்று சொல். தன்னை விற்றுப் போட்ட ஆகாபைப் போல ஒருவனுமில்லை.

## தண்டனை 1 – ஆகாபுக்கு (1இராஜா 21:19)

நாங்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்.

### தண்டனை நிறைவேறுதல் (1இராஜா 22:1–38)

யூதாவின் ராஜா, யோசபாத், இஸ்ரவேலின் ராஜா ஆகாபைப் பார்க்கப் போனான். ஆகாப், ஊழியக்கரரிடம் கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையது. சீரிய ராஜா கையிலிருந்து பிடித்துக் கொள்ளாமல் சும்மாயிருப்பானேன் என்றான். யோசபாத்தை கேட்டபோது வருகிறேன் என்றான். ஆனால், தீர்க்கதரிசிகளிடம் விசாரிக்கலாம் என்றான். 400 தீர்க்கதரிசிகள், ஆண்டவர், ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றனர், கர்த்தர், பொய்யின் ஆவிகளை அனுப்பினதால். மிகாயா தீர்க்கதரிசியை அழைத்து வந்தனர். இஸ்ரவேலரெல்லாரும், மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல மலைகளில் சிதறப்படுகிறதைக் காண்கிறேன் (ஆகாப் கொல்லப்படுவான்) என்றான் மிகாயா.

யோசபாத்தும், ஆகாபும் வேஷம் மாறி யுத்தத்தில் பிரவேசித்தனர். சீரியா ராஜா, இஸ்ரவேலின் ராஜாவோடே மட்டும் யுத்தம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜா என்றெண்ணி, யுத்தம் பண்ண வந்தனர். யோசபாத் கூக்குரலிட்டதால், விலகிப் போயினர்.

ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான். ஆகாபின் கவசத்திலுள்ள சந்தில் தைத்தது. சாயங்காலத்திலே இறந்து போனார். காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிந்தது. ராஜாவை சமாரியாவில் அடக்கம் பண்ணினர். இரதத்தையும், கவசத்தையும், சமாரியாவின் குளத்திலே கழுவுகிற போது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது.

## தண்டனை 2 ஆகாபின் சந்ததிக்கு [1இராஜா 21:21, 2இராஜா 9:7-9] ஆகாபின் சந்ததியை அழித்துப்போடுவேன்

### தண்டனை நிறைவேறுதல்

1இராஜா 20:16,17 கர்த்தர் எலியாவிடம்: நிம்சியின் குமாரனாகிய (பேரனை) யெகூவை இஸ்ரவேல் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணு. ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்று போடுவான்.

2இராஜா 9:1-10 எலிசா தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனை அழைத்து நிம்சியின் மகனான யோசபாத்தின் குமாரனை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகி. ஆகாபின் குடும்பத்தையும் யேசபேலையும் அழித்துவிடு என்று சொல்லி ஓடிவிடு என்றார். அதின்படியே நடந்தது.

### 1. ஆகாபின் மகன் அகசியா

1இராஜா 22:40 ஆகாப் நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். 2இராஜா 1:1-17 அகசியா வியாதிப்பட்டான். எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூவிடம் விசாரிக்க ஆள் அனுப்பினான். கர்த்தர் சொன்னபடி எலியா அந்த ஆட்களிடம் ஏறின கட்டிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய். எலியா சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே இறந்து போனான். அவனுக்கு குமாரன் இல்லை. அகசியா மூலம் ஆகாபுக்கு சந்ததியில்லை.

### 2. ஆகாபின் 70 குமாரர்

2இராஜா 10:1-11 சமாரியாவில் ஆகாபுக்கு 70 குமாரர் இருந்தனர். யெகூ மூப்பர்களுக்கும், பிரபுக்களுக்கும், பிள்ளைகளை பிள்ளைகளை வளர்க்கிறவர்களுக்கும் நிருபங்களை எழுதினான். 70 பேரில் ஒருவனை தேர்ந்தெடுத்து, யுத்தம்பண்ணுங்கள் என்று. அவர்கள் பயந்து, நீர் சொல்லுகிற படி செய்வோம் என்றனர். யெகூ இரண்டாவது கடிதத்தில் 70 பேர் தலைகளை கொண்டு வாருங்கள். அப்படியே அவர்கள் செய்தார்கள். யெஸ்ரயேலில் ஆகாபின் குடும்பத்தாரில் மீதியான யாவரையும், மந்திரிகளையும், அவனைச் சேர்ந்த மனுஷரையும், ஆசாரியர்களையும் கொன்று போட்டனர்.

### 3. அகசியாவின் சகோதரர் (2இராஜா 10:13,14)

யெகூ சமாரியாவுக்கு போகும் வழியில் அகசியாவின் சகோதரர் 42 பேர்களைக் கண்டு எல்லாரையும் வெட்டிப் போட்டான்.

## தண்டனை 3 யேசபேலுக்கு [1இராஜா 21:23, 2நாளா 9:10]

நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும் அவளை அடக்கம்பண்ணுகிறவன் இல்லை.

**தண்டனை நிறைவேறுதல் - 2இராஜா 9:30-37**

யெகூ யெரயேலுக்கு வந்தான். அதை யேசபேல் கேட்டபோது, தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக் கொண்டு, ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள். யெகூ அந்த ஜன்னலை நோக்கி என் பட்சத்தில் இருப்பவர் யார் என்றான். 2, 3 பிரதானிகள் எட்டிப் பார்த்தார்கள். அவளை கீழே தள்ளுங்கள் என்றான். அவளைக் கீழே தள்ளினார். அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெளித்தது. யெகூ உள்ளே போய் புசித்துக் குடித்தான். நீங்கள் போய், சபிக்கப்பட்ட அந்த ஸ்திரீயை அடக்கம் பண்ணுங்கள். அவள் ஒரு ராஜ குமாரத்தி என்றான். அவர்கள், அவளுடைய தலையோட்டையும், கால்களையும் உள்ளங் கைகளையும் அல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. யேசபேலென்று சொல்லக் கூடாதபடிக்கு யேசபேலின் பிரேதம் யெஸ்ரயேலின் நிலத்திலே, வயல் வெளியின் மேல் போடும் எருவைப் போல் ஆகும்.

எனக்கன்பான சகோதரனே, சகோதரியே, எல்லைக் கல்லை மாற்றி, நிலத்தை அபகரித்திருந்தால், எல்லைக் கல்லை பழைய இடத்தில் வை. ஆண்டவரின் மன்னிப்புக் கேள். மன்னிக்க தயை பெருத்திருக்கிறார். பிறர் நிலத்தை அபகரித்திருந்தால், பிறரை ஏமாற்றி பத்திரத்தை உன் பெயருக்கு மாற்றியிருந்தால், அந்த நிலத்தை அவர்களிடம் ஒப்படைத்து விடு. இல்லையானால் ஆகாப், அவன் சந்ததி, அவன் மனைவிக்கு ஏற்பட்ட நிலை ஏற்படும். தேவை தானா? சிந்தியுங்கள். ஓசி 5:10 யூதாவின் பிரபுக்கள் எல்லைகளை ஒதுக்குகிறவர்களுக்கு ஒப்பானார்கள். அவர்கள் மேல் என் உக்கிரகோபத்தை, தண்ணீர் போல ஊற்றுவேன் என்கிறார் கர்த்தர்.

எல்லையை ஒதுக்காதே, எல்லையை ஒதுக்குபவனுக்கு இந்த தண்டனை என்றால், நிலத்தை இச்சிப்பவனுக்கு எவ்வளவு அதிக தண்டனை கிடைக்கும்? உபா 27:17 பிறனுடைய எல்லைக் குறியை ஒற்றிப் போடுகிறவன் சபிக்கப்பட்டவன்.

சாபத்தை உனக்கும், உன் மனைவிக்கும், உன் சந்ததிக்கும் ஏன் வருவித்துக் கொள்ளுகிறாய்? பிறர் நிலத்தை அபகரிக்க இப்போது திட்டம் தீட்டி, யோசித்துக் கொண்டிருக்கிற நீ, ஆகாப், யேசபேல், ஆகாபின் குமாரர், ஆகாபின் சகோதரர் முடிவை நினைத்துப் பார்.

மீகா 2:1,2 அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின்மேல், பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியால், விடியற்காலமாகிற போது அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக் கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு, புருஷனையும், அவன் வீட்டையும், மனுஷனையும், அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு ஐயோ!

பிறர் வீட்டையும், மனுஷனையும், எடுத்துக் கொள்ள முயற்சி செய்யாதே. பிறர் வயலை எடுத்துக் கொள்ள நினைக்காதே. லேவி 25:23 கர்த்தர்: தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்கள் அறுதியாய் (நிரந்தரமாய்) விற்க வேண்டாம். நீங்கள் பரதேசிகள் (நம் சொந்த ஊர் பரலோகம்) என்னிடத்தில் புறக்குடிகளுமாய் (சிலகாலம் தங்கியிருக்கிறவர் களுமாய்) இருக்கிறீர்கள். இதை உணராத நாம், தங்கள் வீடுகள் நித்திய காலமாகவும், இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம். அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்கு தரிக்கிறார்கள் (சங் 49:11).

கி.பி.1013-ல் தங்கள் வீடுகளுக்கு, நிலங்களுக்கு வைத்த பெயர்கள் எங்கே? யோசியுங்கள். நீதி 23:10 பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே.

திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரிக்காதே. ஏசா 5:8 தாங்கள் மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி, மற்றவர்களுக்கு இடமில்லாமற் போகுமட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ.

விசுவாச வீரர்கள் அனைவரும், பூமியின் மேல் தங்களை அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுபவர்கள் சுயதேசத்தை (பரலோகத்தை) நாடிப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள். அப்படிப்பட்ட விசுவாச வீரர்களாக மாற தேவன் உதவுவாராக.

இப்பூமி நமக்குச் சொந்தமல்ல. மரித்தபின் புதைக்கப்படும் 6 அடி நீளமும் 3 அடி அகலமும் கூட நமக்குச் சொந்தமல்ல. கர்த்தர் கொடுத்த நிலத்துக்காக துதிப்போம். பிறர் நிலத்துக்கு ஆசைப்படமாட்டோம்.

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை (1தீமோ 6:7). மண் ஆசை இல்லாமலிருக்க கர்த்தர் உதவுவாராக.



May the Lord bless everyone and his family who gave offering willingly with his heart.

**மனப்பூர்வமாய் உற்சாகமாய் காணிக்கை கொடுத்த ஒவ்வொருவரையும், அவரது குடும்பத்தாரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.**

